## வென்னப்புவ பிரதேச சபை
## புத்தளம் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 10 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வென்னப்புவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | செயலற்ற 03 கணக்குகளின் ரூபா 1,416,145 தொகையான மீதிகள் பல வருடங்களாக கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த வருடத்தில் இவற்றை தீர்ப்பனவு செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 7,331,790 ஆன மூலதன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதன செலவினம் மூலதனமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணி நிறைவடையாததுடன், பெறுமதியினை திட்டவட்டமாக இனங்காண முடியாதமையால் கடன் கொடுத்தோரின் மூலதன செலவினங்கள் அதற்கடுத்த ஆண்டில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 193,311 தொகையான | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிப்பு செலவின விடயங்கள் 04 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |
| (iv) | மீளாய்வாண்டின் போது இயந்திரம் மற்றும் உபகரணங்களின் ரூபா 2,773,904 தொகை மற்றும் தளபாட பொருத்திகளின் ரூபா 501,324 தொகை காணி மற்றும் கட்டிடங்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த மூலதன செலவினத்தினூடாக கட்டிடங்கிள் மேம்படுத்தலொன்று மற்றும் பெறுமதியிலான அதிகரிப்பொன்று இடம்பெறுவதுடன், அவை பொருத்தப்பட்ட பின்னர் அசையும் சொத்தொன்றாக இனங்காணப்படாமையினால் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (v) | முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 2,232,979 பெறுமதியான மீண்டெழும் செலவினங்கள் மீளாய்வாண்டிலும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த பாராமரிப்பு செலவினதிற்கு சமன்னான மூலதன செலினங்கள் கலந்து காணப்படுகின்றதுடன், அது திருத்தப்பட்டது. |
| (vi) | ரூபா 201,305 பெறுமதியான மின்சார களஞ்சிய விடயங்கள் இரண்டு கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பேரேட்டுக் குறிப்புகளினூடாக திருத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vii) | மீளாய்வாண்டின் சுற்றாடல் அனுமதிப்பத்திர வைப்பு ரூபா 508,375 தொகை வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்புகளினுள்ளான சுற்றாடல் அனுமதிப்பத்திர ரூபா 508,375 ஆன பெறுமதிக்காக குறைநிரப்பு மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அவற்றை வைப்புகளிலிருந்து விடுவிப்பதற்கு தவறியிருந்தது. |
| (viii) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடாத ரூபா 79,255,057 பெறுமதியான 16 கைத்தொழில்களுக்காக கடன்பட்டோர் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் | உடன்படிக்கை கைச்சாத்திடாத கைத்தொழில்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. | 2018 ஆம் ஆண்டின் போது பல்வேறு மூலதன நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும், நிலவிய நடைமுறை சிக்கல்களின் காரணமாக சில நிகழ்ச்சித்திட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| | லை. | | நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. அதனால் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் கடன் பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ix) | கடந்த வருடங்களுக்குரிய ரூபா 80,160,359 தொகையான முத்திரை கட்டணம் பெறுவனவு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னைய ஆண்டுகளுக்குரிய போதிலும் முன்னைய ஆண்டுகளின் பாதிடப்பட்ட எல்லைகளை விஞ்சிய நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரை கட்டணங்கள் நடப்பாண்டின் குறைநிரப்பு வருமானம் ஆக எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு காரணமாக அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்தும் நியாயமான நோக்கமொன்றின் அடிப்படையில் நடப்பாண்டிற்கு சீராக்கம் செய்யப்பட்டது. |

## (ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | இரண்டு கணக்கு விடயங்களின் பட்டோலைகள் / பயன்பாட்டு புத்தகங்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின பிரகாரம் மீதிகளுக்கிடையே இணங்காமைகளின் கூட்டுத்தொகை ரூபா 434,057 ஆகும். | பதிவேடுகள் திருத்தப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | காசு மீதியில் வேறுபாடொன்று காணப்படுவதற்கு காரணமாக அமைந்தது நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்ட வங்கி இணக்க கூற்றில் ஏற்பட்ட தொங்கல் கணக்கு மற்றும் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி காசு புத்தகத்திற்கு சீராக்கம் செய்யப்படாத காரணத்திலாகும். |
| (ii) | பேரேட்டுக் கணக்கு, வருமானம் மற்றும் செலவின கணக்கு மற்றும் பி.ச.14 மற்றும் பி.ச. 19 | பி.ச.14 மற்றும் 19 அறிக்கைகள் சரியாக தயாரிப்பதற்கு | நிதிக்கூற்றுக்களில் பேரேட்டுக் குறிப்புகள் மூலம் மேற்கொள்ளப்படும் சீராக்கங்கள் பி.ச |

| | | | |
|---|---|---|---|
| | இன் பிரகாரம் ரூபா 26,043,740 தொகையான 8 உறுப்படிகளில் வேறபாடுகள் அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிக்கைகளில் காண்பிக்கப்படாமையால் இவ்வாறான வேறுபாடொன்றை காண்பிக்கின்றது. பி. ச. 19 இணை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமை கூற்றின் ஏனைய நடைமுறை சொத்துக்களினுள் நீண்ட காலமாக பெற வேண்டிய ரூபா 150,098,398 ஆக இனங்காணப்படாத 07 மீதிகள் காணப்பட்டன. | இனங்காணப்படாத மீதிகளை துரிதமாக இனங்காணுவதற்கும் உரிய சீராக்கங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனங்காணப்படாத பெற வேண்டிய கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்காக குழுவொன்று மூலம் செயற்படுமாறு உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும் இது வரையிலும் அதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |
| (ii) | நிதி நிலைமை கூற்றின் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளவற்றினுள் நீண்ட காலமாக இனங்காணப்படாத ரூபா 23,124,936 ஆன பிற்போடப்பட்ட 4 மீதிகள் காணப்படுகின்றன. மேலும் 3 வருடங்களுக்கு முன்னர் நிறைவு செய்யப்பட்ட 11 தொழிற்சாலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,393,206 ஆன தொகையும் இனங்காணப்படாத 5 உறுப்படிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,117,132 ஆன தொகையும் ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனங்காணப்படாத செலுத்த வேண்டிய கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்காக குழுவொன்று மூலம் செயற்படுமாறு உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும் இது வரையிலும் அதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |

(ஈ) **கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 344,962,791 கூட்டுப் பெறுமதியுடைய 03 விடயங்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்களின் பதிவேடு 2018 ஆம் ஆண்டிற்கு நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| **(அ)** | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம்.** | | | |
| **(i)** | 13 ஆம் பிரிவு | பொது சமய, புண்ணிய பணிகள், கல்விசார் மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது/சமய/கல்வி இடங்கள் மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய ஆதனங்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ii)** | 134 ஆம் பிரிவு | அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை திட்டவட்டமாக காலத்திற்கு காலம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2008 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டு 2011 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. | புதிய வருமான மூலங்கள் இனங்காணப்பட வேண்டும். | அதிகார பிரதேசத்தில் புதிதாக மதிப்பீடொன்றினை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |
| **(iii)** | 136 ஆம் பிரிவு | நிலுவை வீத வரி ரூபா 3,632,922 தொகை மற்றும் நிலுவை ஏக்கர் வரி ரூபா 203,213 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வீத வரி மற்றும் கடை வாடகை அறவிட்டு நிலவிய மீதியை குறைத்துக் கொள்வதற்கும் நீண்ட காலமாக அறவிடப்படாத மீதிகளுக்காக மாற்று (சட்ட ரீதியான) நடவடிக்கை எடுப்பதற்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. |
| **(iv)** | 143 ஆம் பிரிவு | சபையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு 5 வருடத்திற்கும் ஒரு தடவை மதிப்பீடு | புதிய மதிப்பீடுகளின் பிரகாரம் வருமான வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | இது வரையிலும் அறவிடப்பட்ட வீத வரி மற்றும் புதிதாக இனங்காணப்பட்ட ஆதனங்களுடனான பட்டியல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டு அதற்கமைய வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| **(v)** | 159(1) ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான ஆதனங்கள் வாடகைக்கு வழங்குவதின் மூலம் அறவிடப்பட வேண்டிய பணத்தினை அறவிடுவதற்கு மற்றும் ஆதனங்களை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீத வரி நிலுவை பணத்தை அறவிடுவதற்காக அசையும் மற்றும் அசையாத ஆதனங்களை இரத்துச்செய்து விற்பனை செய்வதற்கு செயலாளரினால் பணம் சேகரிக்கும் நபர்களுக்கு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| **(ஆ)** | **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி** | | | |
| | விதி இலக்கம் 5(7) | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பலப்படுத்தப்பட வேண்டும். | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளில் தொடர்பில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடைபெறுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 167,577,374 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 123,568,433 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,416,145 தொகையான 3 வங்கி நடைமுறை கணக்குகள் பல வருடங்களாக செயலற்று காணப்பட்டன. | வங்கி கணக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது செயற்திட்டம் நிறைவடைந்துள்ள நடைமுறை கணக்குகளை மூடி உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | இலக்கம் 0001865986 கொண்ட நடைமுறை கணக்கின் 2014 டிசம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றில் உள்ள ரூபா 384,602 ஆன தொங்கல் கணக்கு மற்றும் ரூபா 33,955 ஆன மதிப்பிழந்த காசோலைகள் மீளாய்வாண்டின் காசுப்புத்தகத்தின் மீதிக்கு சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. | வங்கி மற்றும் காசு மீதிகள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த தொங்கல் கணக்கின் பெறுமதிக்கு காரணங்களுடன் காசு கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதிகள் வங்கி இணக்க கூற்றிலிருந்து அகற்றப்பட்டு வேறாக கணக்கொன்றில் காண்பிக்கப்பட்டள்ளது. அது இனங்காணப்படாத |

மீதிகளுடன் பின்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மதிப்பீடு மற்றும் வரியும் | 15,929 | 17,025 | 18,834 | 3,765 | 11,991 | 13,029 | 9,928 | 4,867 |
| வாடகை | 43,075 | 40,922 | 36,951 | 3,917 | 42,894 | 69,419 | 68,235 | 4,466 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,774 | 3,960 | 3,960 | 508 | 6,696 | 7,079 | 7,079 | - |
| ஏனைய வருமானம் | 296,159 | 289,422 | 326,755 | 191,490 | 213,131 | 242,130 | 170,998 | 170,612 |
| மொத்தம் | 359,937 | 351,329 | 386,500 | 199,680 | 274,712 | 331,657 | 256,240 | 179,945 |

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புகள் மற்றும் கடந்த வருடங்களில் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும் உள்ளடங்கியுள்ளது.
- ❖ சுற்றாடல் வைப்பு தொகையொன்று பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்களில் உள்ளடங்கியுள்ளது.

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு உரிய பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 351.33 மில்லியனில் ஆண்டினுள் ரூபா 225.66 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டினுள் நிலுவை வருமானம் ரூபா 179.94 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் தொடர்ந்தும் ரூபா 199.68 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வீத வரி மற்றும் கடை வாடகையினை அறவிடுவதற்கும் நீண்ட காலமாக அறவிடப்படாத மீதிகளுக்காக மாற்று (சட்ட ரீதியான) நடவடிக்கை எடுப்பதற்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. |

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

**(அ) வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளராட்சி (நிதி மற்றும் நிர்வாக) விதி 153 இன் பிரகாரம் பி.ச.07 அறிக்கை மாதாந்தம் தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் ஒட்டுமொத்த வீத வரி நிலுவை குறித்த பதிவேட்டின் பிரகாரம் ரூபா 3,632,922 ஆனமையால் நிலுவைகளை சேகரித்தல் போதுமானதாக இருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பி.ச. 07 அறிக்கை காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு இருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் அது மாதாந்தம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். நிலுவை வீத வரியை அறவிடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 207,765 தொகையான நிலுவை மீதி ஆண்டின் இறுதியளவில் ரூபா 202,213 ஆக இருந்ததுடன் பிரதேச சபை உப அலுவலகங்களில் ஏக்கர் வரி பேரேடு நாளதுவரையாக பேணவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிய காணிகள் துண்களாகப்பட்டிருந்தமை, பிள்ளைகளிடையே பகிரப்படுகின்றமை மற்றும் சில ஆதனங்களை இனங்காண முடியாமையால் நிலுவை ஏக்கர் வரியினை அறவிட முடியாதுள்ளது. இவற்றை இனங்காணுவதற்கு மதிப்பாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன். |

### 2.3.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை குத்தகை வாடகை மற்றும் கடை வாடகை முறையே ரூபா 902,479 மற்றும் ரூபா 3,012,358 தொகையாக இருந்ததுடன் அதனுள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடை | நிலுவை வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியின் உள்ளவாறான குத்தகை வாடகை மற்றும் கடை வாடகை நிலுவை தொகையில் இதுவரையிலும் ரூபா 386,623 தொகையான |

| | | |
|---|---|---|
| வாடகை ரூபா 2,240,988 தொகை மற்றும் குத்தகை வாடகை ரூபா 192,710 ஆகும். | | கடை வாடகை மற்றும் ரூபா 381,529 தொகையான குத்தகை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாத மீதிகள் தொடர்பில் மாற்று (சட்ட ரீதியான ) நடவடிக்கை எடுப்பதற்கு முன்னெடுக்கப்படுகின்றன. |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற்றுக் கொள்ள வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 64,992,110 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 113,303,811 உம் ஆகும். | அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், இது வரையிலும் அவை பகுதியளவில் அறவிடப்பட்டவாறு உள்ளது. |

### 2.4 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (3) ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளின் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 326,355 தொகையை அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவிடல்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் தாமதித்து செலுத்தப்படும் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு பணத்திற்காக நீதிமன்ற தண்டப்பணம் தொடர்பில் விசாரணை அறிக்கைகள் மற்றும் அந்த அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் மேல் மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள முகாமைத்துவ உதவியாளர் திரு பிரசன்ன ஜனனந்த அவர்களிடமிருந்த அறவிட |

| | | |
|---|---|---|
| | | உரிய கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு 2019 ஏப்ரல் 30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபை மக்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக உப விதிகளை விதித்திருக்கவில்லை. | | |
| (i) காணிகள் மற்றும் ஆதனங்கள் - பிரதேச சபைக்கு அல்லது பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அசையாத ஆதனங்களின் பராமறிப்பு மற்றும் முகாமைத்துவம்.<br>(ii) பாதைகள் மற்றும் குறுக்கு வீதிகள் ஆகியவற்றை சுத்திகரித்தல், நீர் விநியோகம், பார மற்றும் வேகம் ஆகியவற்றை மட்டுப்படுத்துவதிலுள்ள தடைகள் இடையூறினை தடுத்தல், கணக்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்.<br>(iii) சுற்றுலா பயணிகள் மேற்பார்வை, நிர்வாகம், அதற்கான அனுமதிப்பத்திரங்களை வெளியிடுதல்.<br>(iv) விலங்குகளை வைத்திருத்தல், கூட்டிலடைத்தல், பராமறித்தல் மற்றும் பாதுகாத்தல். | உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | இதன் பெரும்பாலான விடயங்கள் 1990.03.02 வர்த்தமானி அறிவித்தலில் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் மூலம் மேவுகை செய்யப்படுவதுடன் சில விடயங்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எவ்வாறெனினும் மேவுகை செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் உப விதிகளை விதிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகள் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டமொன்று (அபிவிருத்தி திட்டம் எனும் பெயரில்) தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் 2014 பெப்ரவரி 17 ஆம் திககிய PED/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றிக்கை 04 ஆம் பந்திக்கு இணங்காமை. | சுற்றிக்கையின் பிரகாரம் வருடாந்தம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இது வரையிலும் 2019 – 2022 வரையான ஐந்து வருட அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) நிதியேற்பாடுகளை மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 163 பணிகளில் 151 இற்காக மாத்திரம் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகின்றமையால் 12 பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | குறித்த செயற்திட்டத்திற்காக நிதியேற்பாட்டினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில பணிகளை நிறைவேற்றும் போது செலவீனத்தை மேற்கொள்ள தேவை ஏற்படாமை, ஏனைய செலவின விடயங்களில் மேற்கொள்ள நேர்கின்றதுடன் ஏனைய பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. |

**(ஈ) நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை தனது வருடாந்த திட்டத்தின் இனங்காணப்படாத 08 பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. | திட்டத்திலிருந்து விலகிய பணிகளுக்காக நிர்மானிக்கும் அவசியத்தன்மை பிரகாரம் மிகவும் துரிதமாக அபிவிருத்தி பணிகள் | 2018 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டினை தயாரிக்கும் போது மற்றும் வருடாந்த திட்டத்தினை தயாரிக்கும் போது இனங்காணப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளும் பிரகாரம் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | எனினும் 2018 ஏப்ரல் மாதத்திலும் பொது சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சபையினை ஸ்தாபிப்பதற்கு முன்னர் இனங்காணப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக மக்கள் பிரதிநிதிகளால் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என இனங்காணப்பட்ட இவ்வாறான அபிவிருத்தி முன்மொழிவுகளையும் நிறைவேற்றுவதற்கு சபைக்கு நேர்ந்தது. |

**(உ) எதிர்பார்த்த உற்பத்தி மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த 14 பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 17,100,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் ரூபா 2,874,737 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை கைப்பற்ற முடியாதிருந்தது. | பணியினை நிறைவேற்றும் போது எதிர்பார்த்த அடைவ மட்டத்தினை அண்மிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டினுள் அபிவிருத்தி திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பணிகள் சிலவற்றிலிருந்து எதிர்பார்த்த அடைவு மட்டம் பல்வேறு காரணங்களினால் கைப்பற்ற முடியாதிருந்ததுடன் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட நேர்ந்தமையால் உத்தேச அடைவுகளை அண்மிக்க முடியாதுள்ளது. என தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(ஊ) கைவிடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் 26 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 21,875,000 ஆன நிதியேற்பாடு | திட்டத்தின் பிரகாரம் அவசியமான | மீளாய்வாண்டினுள் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | பணிகள் மாத்திரம் இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | போதிலும் எதிர்பார்த்த பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்படாத பணிகளும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு சுற்றாடல், அரசியல், சமூக விடயங்கள் காரணமாகும். |

**(எ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 168.27 கான கிலோமீற்றர்கள் கொண்ட அதிகார பிரதேசத்தினை கொண்டமைந்த பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் குப்பைகளை சேகரித்தல் 05 பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சபையின் அதிகார பிரதேசத்தினுள் மருத்துவமனைகள் மற்றும் 17 சிகிச்சை நிலையங்கள் மற்றும் 03 கைத்தொழில் வலயங்கள் காணப்பட்ட போதிலும் அந்த இடங்களின் குப்பைகளை சேகரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | பிரதேசம் மற்றும் இடங்களை வரையறுக்காது குப்பைகளை சேகரிக்கும் பணிகள் திட்டமிடப்பட வேண்டும். | குப்பைகளை சேகரிக்கும் போது வென்னப்புவ அதிகார சபை 168.27 இற்கான கிலோமீற்றர்களை கொண்டிருந்த போதிலும் அனைத்து நகர எல்லைகளையும் உள்ளடக்கியவாறு வென்னப்புவ நகரம், கிரிமெட்டியான நகரம் மற்றும் தங்கொட்டுவ ஆகிய நகரங்களை முன்னுரிமைப்படுத்தி வீதவரி எல்லையினுள் குப்பைகளை சேகரிக்கப்படுகின்றன. இந்த வருடத்தில் கைத்தொழில்சாலையின் கோரிக்கைகளின் அடிப்படையில் கட்டணங்களை அறவிட்டு குப்பைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) சபைக்கு சொந்தமான கூட்டெரு நிலையத்தின் பராமறிப்பு பணிகளுக்காக பாரிய செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குப்பை வரியினை வித்திராமையால் கிரயம் சபையின் வருமானத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குப்பை வரியினை விதிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குப்பை அகற்றுவதிலுள்ள சிக்கல்களின் அடிப்படையில் இந்த வருடத்தினுள் குப்பை கட்டணமொன்றை அறவிடுவதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அந்த கட்டணத்தினை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்படுகின்றது. |
| (iii) | மல கழிவுகளை அகற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று சபையினால் இனங்காணப்பட்டிராததுடன் அவை தனிப்பட்ட காணிகளில் கொட்டப்பட்டிருந்தன. | பொருத்தமான இடமொன்றினை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மல கழிவு சுத்திகரிப்பு அலகொன்றினை ஸ்தாபிக்க பொருத்தமான நிலம் ஒன்று சபையிடம் காணப்படவில்லை. சபையினால் முன்மொழியப்பட்டுள்ள செந்திரியாமுல்ல காணி கிடைத்தவுடன் மலக்கழிவுகளை சுத்திகரிக்கும் அலகொன்றினை ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

**(ஏ) நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ இன் பிரகாரம் நிலைபேறான நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் சபை அறிந்திருந்த போதிலும் முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் பணிகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டினுள் திட்டம் தயாரிக்கப்பட்டு இலக்குகளை இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனினும் சபையின் பணிகள் அதன் நோக்கங்கள் மற்றும் அவற்றுடன் இணங்குகின்றமையால் அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அந்த நோக்கங்களுக்கு நிதி பங்களிப்பொன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. அதாவது வறுமையினை ஒழித்தல், உணவு பாதுகாப்பு, போசனை, ஆரோக்கியம், கல்வி, வலுசக்தி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழிநுட்ப மேம்பாடு, முழுமையான வேலைவாய்ப்பு மற்றும் வழங்கலின் சிக்கனமான பயன்பாடு போன்ற நோக்கங்கள் தொடர்பில் சபையின் நிதி பங்களிப்பொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு உரிய பணிகள் மற்றும் இலக்குகள் மற்றும் அளவீட்டு குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு குறித்த இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக்குரிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் சபையினால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் அளவீட்டு குறிகாட்டிகளுடன் அவற்றை மதிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XII அத்தியாயத்தின் 8.5 பிரிவின் பிரகாரம் 9 மாதங்கள் தொடர்ச்சியான சேவையினை பூர்த்தி செய்யாத ஒரு பெண் உத்தியோகத்தர் 04 தடவைகள் மற்றுமொரு உத்தியோகத்தர்ள் 02 தடவைகள் படி மீளாய்வாண்டினுள் வெளிநாடு சென்றிருந்தனர். எனினும் 8.1 மற்றும் 8.2 உப பிரிவகளினினை கருத்திற் கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவை பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் தொடர்ந்தும் இது தொடர்பில் விடயங்கள் தெளிவு படுத்தப்பட்டு விடுமுறை விண்ணப்பளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 20 இன்படி சபைக்கு யாரேனும் ஒருவரால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவொன்று தொடர்பில் முதலில் செய்யப்பட வேண்டியது வருமான எழுத விளைஞர் ஆனபோதிலும் வென்னப்புவ எல்பட் எப் பீரிஸ் விளையாட்டுத் திடலின் அறவிடப்படும் கட்டணங்களை சேகரிக்கும் பொறுப்பு விளையாட்டுத் திடலின் காவலருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும் அவரால் சேகரிக்கப்படும் பணம் மிகவும் தாமதித்து தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கு 2018 திசெம்பர் 11 ஆம் திகதி கையளிக்கப்பட்ட பற்றுச்சீட்டு புத்தகங்கள் 08 ஆனது 2019 பெப்ரவரி 01 திகதி வரையிலும் மீள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விதியின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் குறித்த புத்தகங்கள் பற்றுச்சீட்டு புத்தகங்கள், பணம் தொடர்பில் முறையான நிர்வாகமொன்று மற்றும் கண்காணிப்பொன் று நடைமுறைப்படுத்த ப்படல் வேண்டும். | இது வரையிலும் இந்த நிலைமை திருத்தப்பட்டுள்ளது. அவ்வாறே குறித்த உத்தியோகத்தர் தாமதித்து பணம் ஒப்படைத்தல் தொடர்பில் ஆரம்ப விசாரணை ஒன்றினை மேற்கொண்டு அதன் பெறுபேறுகள் பிரகாரம் அவருக்கு தண்டனை வழங்க திட்டமிடப்பட்டள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிறைவேற்று தரத்தின் ஆயர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் பல வருடங்களாக சேவையாற்றும் அமைய மருத்துவ உத்தியோகத்தர் இரட்டை இரண்டாம் தரத்திலான பதவியிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் இருவர் 03 வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் ஆரம்ப தரத்திலான பதவிகளில் அமைய ஊழியர்கள் 51 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையினை அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சபையினால் பிரதம ஆயுர்வேத நிலையங்கள் மூன்றிற்கு மேலதிகமாக நடமாடும் மருத்துவ நிலையங்களும் காணப்படுகின்றமையால் அந்த சேவை தேவைப்பாட்டினை பூர்த்தி செய்துகொள்வதற்காக அமைய ஆயுர்வேத உத்தியோகத்தரொருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். |

### (ஆ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 30,068,400 தொகையான ஊழியர் கடன் மீதியினுள் முன்னைய ஆண்டுகளில் சேவையை கைவிட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 345,575 ஆன மீதியும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 04 உத்தியோகத்தர்களின் ரூபா 275,450 மீதியும் காணப்பட்டது. | நிலுவை கடன் மீதியை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபைக்கு சொந்தமாக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 257 கடைகளில் 73 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராததுடன் அவற்றுள் 62 தங்கொட்டுவ உப அலுவலகத்திற்கு உரியவை ஆகும். அந்த 62 கடைகளில் ரூபா 2,283,986 தொகை மற்றும் ஆதனங்களை குத்தகைக்கு | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத 73 கடைகளுக்காக உடன்படிக்கை | தங்கொட்டுவ உப அலுவலகத்தின் உடன்படிக்கை இல்லாது 44 கடைகள் ஆகும். ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அறவிடப்பட வேண்டிய தொகையில் இது |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கியமையால் ரூபா 133,456 அறவிடப்பட வேண்டும். | கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரையிலும் ரூபா 87,638 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | தங்கொட்டுவ உப அலுவலகத்திற்குரிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கடைகளில் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாத நிலுவை மீதிகள் தொடர்பில் குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159 (1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடைகளில் 10 ஆம் இலக்க கடைக்கு உரிய நிலுவை பணம் அறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்படும் என தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபைகள் ( நிதி மற்றும் நிர்வாக) விதி இலக்கம் 217 பிரகாரம் சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிராததுடன் நிலவும் காணிகளின் தெளிவான உரித்துறுதிகள் சபையிடம் உள்ளமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களுக்காக பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | காணி /கட்டிடம் பதிவேடு பேணப்பட்டுள்ளது.<br>உரித்துறுதி / கையளிப்புக் கட்டளை இல்லாத காணிகளுக்காக உரித்துறுதி / கையளிப்புக் கட்டளைகளை பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

**3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் நீண்டகால குத்தகை அடிப்படையில் மாகாண கல்வி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த 30 பேர்ச் அளவான காணிக்கு இரு தரப்பினரிடையே குத்தகை உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக குத்தகை உடன்படிக்கையொன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பில் பிரதான அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1991 ஆம் ஆண்டின் போது ரூபா 4,595,663 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பதிவு இலக்கமற்ற மோட்டார் கிரேடர் ஒன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்மல்பத்துவ உப அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | குறித்த பதிவு இலக்கத்தினை பெற்று கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏலமிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் இது வரையிலும் இதற்கு கொள்வனவாளர் ஒருவர் முன்வந்திருக்கவில்லை. எதிர்காலத்தில் மதிப்பீட்டினை திருத்தி இதனை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.5.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய வருடத்தின் இருப்பு மதிப்பாய்வு ஒன்று இனங்காணப்பட்ட முன்பள்ளிகளின் பொருட்களின் பதிவேட்டிற்கு உட்படுத்திமைக்கான சான்றுகள் இல்லாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் தங்கொட்டுவ உப அலுவலகத்தின் பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்ட 06 பொருட்கள் மற்றும் 09 பொது நூலகங்களின் ரூபா 108,188 பெறுமதியான 566 புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் தொலைந்து போயுள்ள போதிலும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பொருட்களை பதிவேட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தொலைந்து போயுள்ள புத்தகங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டின் பொருள் மெய்மையாற்விற்குரிய பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாத அனைத்து பொருட்களையும் பதிவேட்டிற்கு உட்படுத்தி முன்வைக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொலைந்து போயுள்ள புத்தகங்களின் பெறுமதியை நூலகத்தின் பதவியணியிடம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1 பிரிவின் படி தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைகள் | பெறுகைகள் வழிகாட்டி கோவை | 2018 ஆண்டிற்கு உரிய பணிகளுக்காக பெறுகைகள் திட்டமொன்று |

| | | |
|---|---|---|
| திட்டம் மீளாய்வாண்டினை போன்றே முன்னைய ஆண்டுகளுக்கும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பின்பற்றப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 17 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 170 ஆம் பிரிவிற்கு முரணாக பாதீடு இல்லாத (மூலதன) செலவின விடயங்கள் 15 இற்காக ரூபா 17,660,432 ஆன நிதியேற்பாடு மாற்றப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் பாதீட்டில் இல்லாத 15 அபிவிருத்தி விடயங்களுக்காக செலவின விடயங்களின் மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமான நிதியேற்பாடு பெறப்பட்டு சபையினால் இனங்காணப்பட்ட தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்களாக கடந்த 02 வருடங்களுக்காக கிடைத்த ரூபா 66,856,548 தொகை மற்றும் பெற வேண்டிய ரூபா 13,303,811 தொகைக்காக குறைநிரப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செலவீனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கை பிரகாரம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில் லை. |
| (இ) | மூலதன செலவின விடயங்களான தங்கொட்டுவ மரக்கறி சந்தையினை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4,000,000 ஆன தொகையும் மீண்டெழும் செலவின விடயமான சுகாதார மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்காக மாற்றப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மூலதன செலவின விடயங்கள் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மாற்றப்படக்கூடாது . | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று மீண்டும் ஏற்படாதிருக்க கருத்துடன் செயற்படுவதாக தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன். |
| (ஈ) | சபையின் மூலதன செலவினத்தை மேற்கொள்வதற்காக விடய இலக்கம் 13 இற்காக ரூபா | நிதியேற்பாடுகளை பயன்படுத்தி பணிகளை | புதிய சபையினை தாபித்ததன் பின்னர் மக்கள் பிரதிநிதிகளால் |

| | | | |
|---|---|---|---|
| | 32,900,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 04 விடயங்களுக்காக ரூபா 1,829,971 செலவினம் மேற்கொண்டிருந்த போதிலும் மொத்த நிதியேற்பாட்டில் சேமிப்பானது 94 சதவீதமாகும். | நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்காக நிதியேற்பாடுகளை ஒதுக்குவதற்கு நேர்ந்தமையால் இந்த அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றற முடியாதிருந்தது. |
| (உ) | மீளாய்வாண்டின் பாதீட்டின் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாத ரூபா 1,350,000 பெறுமதியான மூலதன செலவின விடயங்கள் 02 இற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு குறித்த பணி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கால ரீதியான நிதியேற்பாடுகளில் உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். | பராமறிப்பு செலவினங்கள் மற்றும் வென்னப்புவ பேருந்து தரிப்பிடத்திற்கு அருகிலுள்ள கடைகளில் பெரும்பாலானவற்றின் பராமறிப்பு செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் புச்சம்பொல நூலகத்தினை முன்னாலுள்ள கல்லூரி மற்றும் பாதையினை கொங்கிரீட் இடுவதற்காக கடன்கொடுத்தோரின் கீழ் அந்த நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி 5 (7) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வினை பலப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பௌதீக மற்றும் நிதி பணிகள் மதிப்பிடப்பட்டு உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படும். மேலும் சபைக்கு தனியான உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் கோரப்பட்டுள்ளார். |

## 4.3 தீர்க்கப்படாததுள்ள அவதானிப்புகள் மற்றும் பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 75,900 பெறுமதியான 69 கல்வனைசு கம்பிகள் தொலைந்து போனமை. | நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 92 கல்வனைசு கம்பிகளுக்காக பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் வெளித்தரப்பினர்களுக்கு பிரதேசத்தின் விழாக்கள் மற்றும் சமய பணிகளுக்காக மீள கையளிக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. |
| (ii) | 2016 ஆம் ஆண்டின் போது வருமானமாக பதிவளிக்கப்பட்டுள்ள ரூபா 30,756,510 தொடர்பில் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 28,252,666 ஆன சம்பள மீளளிப்பு அனுமதியொன்று இல்லாது கடந்த வருடத்தின் திரண்ட நிதியத்திற்கு பதிவளித்தல். | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்தினால் நாளாந்த சம்பள மீளளிப்பு மேற்கொள்ளப்படாமையினால் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டது. |